DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF, NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | : | **O.S.133/2023** |
| **Deposition of witness for** | : | **Defendant** |
| **Serial No. of Witness** | : | **DW.1** |
| **Name** | : | மீனாட்சி |
| **Husband Name** | : | இசக்கி |
| **Village** | : | தேவநல்லூர் |
| **Taluk** | : | நான்குநேரி |
| **Age** | : | 63 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of day of 11.09.2025

சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

முதல் விசாரணை.

நான் இவ்வழக்கில் பிரதிவாதி ஆவேன். பிரதிவாதி தரப்பில் 1வது சாட்சி ஆவேன். எனது முதல்விசாரணை வாக்குமூலத்தை எழுத்துமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. 10.02.1984 தேதியிட்ட சுடலைமுத்து எழுதி வைத்த உயில் பி.சா.ஆ.1, எனது கணவர் இசக்கி பெயரில் உள்ள பழைய கதவு எண்.5/38A விற்குரிய வீட்டு வரி ரசீதுகள் அசல் (எண்ணம் 3) பி.சா.ஆ.2, எனது கணவர் இசக்கி பெயரில் உள்ள புதிய கதவு எண்.5/117 விற்குரிய வீட்டு வரி ரசீதுகள் அசல் (எண்ணம் 6) பி.சா.ஆ.3, இசக்கி அவர்கள் பெயரில் உள்ள மின் இணைப்பு கட்டண ரசீது அசல் (எண்ணம் 1) பி.சா.ஆ.4, 2ம் வாதி வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பு சார்பு நகல் பி.சா.ஆ.5, எனது கணவர் இசக்கி தனது வழக்கறிஞர் மூலம் 29.04.2021 தேதி அனுப்பிய வழக்கறிஞர் பதில் அறிவிப்பு அலுவலக நகல், தபால் ரசீது மற்றும் ஒப்புகை அட்டை பி.சா.ஆ.6, இசக்கி அவர்களின் இறப்பு சான்றிதழ் கணினி நகல் பி.சா.ஆ.7, எனது குடும்ப அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) பி.சா.ஆ.8, எனது ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டது) பி.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யபடுகிறது.

குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கபடுகிறது.

MANJULA C

Digitally signed by MANJULA C
Date: 2025.09.12 15:47:10 +0530